**Date** : 15.09.2025

**SC.No.** : **256/2024**

**PW** : **1**

**Name** : **முத்துராஜா**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எத்தனை முறை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் வைத்து ஒரு முறை மட்டும் விசாரணை செய்தார்கள். எத்தனை வருடங்களாக இருசக்கரவாகனம் விற்பனை தொழிலை செய்து வருகிறேன் என்றால் 2018 லிருந்து செய்து வருகிறேன், அதற்கு முன்பாக 2014 லிருந்து எனது குடும்பத்தார்கள் இந்த தொழிலை செய்து வருகிறார்கள். 2ம் நிலை விற்பனை தொழிலில் நாங்கள் இருசக்கரவாகனம் வாங்குபவர்களுக்கு Finance செய்து கொடுப்போம் என்றால் சரிதான்.

2. எனது அம்மாவும் அ.சா.3 ராஜராம் அம்மாவும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கின் சாட்சியான நாகராஜ் எனது அம்மாவுடன் உ டன்பிறந்த தங்கையின் கணவர் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 புகாரை எழுதியது யார் என்றால் வழக்கறிஞர் ஆவார். என்னை 108 ஆம்புலன்சில் தகவல் சொல்லி ஏற்றிவிட்டது யார் என்றால் ரோட்டில் சென்றவர் யாரோ தகவல் சொல்லி 108 ஆம்புலன்சில் ஏற்றிசென்றார்கள், நான் அந்த இடத்தில் அவர்கள் இரண்டு பேரையும் 108 ஆம்புலன்சில் ஏற்றும் போது இல்லை.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சிப்காட் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் 5 கி.மீ துாரம் இருக்கும். எங்களை எதிரிகள் வெட்டியதை ரோட்டில் சென்ற ஒரு நபர் சிப்காட் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள் என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் போலிசார் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால்

சொல்லியுள்ளேன்.

4. என்னுடைய இருசக்கரவாகனத்தை போலிசார் கைப்பற்றவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய புல்லட் வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு போலிசார் விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் கேட்டு பெற்றார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன சிப்காட் போலிசாரும் ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்சில் மூலமாக காயம்பட்ட நாங்கள் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம் என்ற சங்கதியை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி போலிசார் என்னிடம் கேட்கவில்லை.

5. மானாமதுரை - தஞ்சாவூர் ரோடு தேசிய நெடுஞ்சாலை என்பதால் கார் போக்குவரத்து எப்போதும் அதிகமாக இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரில் செல்லம், கருப்பு என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் செல்லம், கருப்பு என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. ஏலம்மாள் மகளை நாகராஜன் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புல்லட் பைக்கிலிருந்து கீழே விழும் போது காயம் ஏற்பட்ட விபரத்தை முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மதுரை அரசு மருத்துவமனைக்கு அ.சா.2, 3 உடன் நான் சென்றேனா என்றால் செல்லவில்லை நேராக மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

7. மீனாட்சி மிசன் மருத்துவமனையில் மருத்துவமனை மருத்துவர்கள் என்னை பரிசோதனை செய்தார்களா என்றால் பரிசோதனை செய்தார்கள். எனக்கு மீனாட்சி மிசன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை

செய்தார்களா என்றால் செய்தார்கள். என் மீதும், சுதாகார், ராஜாராம், சுதாகர், போஸ், அழகுபாண்டி, கிருஷ்ணன் என்பவர்கள் மீது SC.No.68/2011 என்ற வழக்கில் பரதன் என்பவர் புகார் கொடுத்து இதே நீதிமன்றத்தில் 307 வழக்கு நடைபெற்று தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

8. என் மீது சிவகங்கை நகர் காவல்நிலையத்தில் குற்ற எண்.709/2010, சிவகங்கை தாலூக காவல்நிலையத்தில் குற்ற எண்.6/2009 வழக்குகள் நிலுவையில் இருக்கிறதா என்றால் இல்லை. மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என் மீது சிசி. நம்பர். 917/2022 வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ஆமாம். வைரமணியும், பண்ணகருப்பையாவும் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் மற்றும் நேரத்தில் சிவகங்கை சிவன் கோவிலில் இவ்வழக்கில் கண்ட எதிரியான வைரமணி, மு.த்துச்சாமி ஆகியோர்கள் பண்ணக்கருப்பையா மகள் திருமணத்தில் கலந்து கொண்டு அங்கு தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

9. வழக்கின் எதிரி பாண்டி நரம்பு சம்மந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு ஒரு நபரின் துணையின்றி வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் இருக்கிறார் என்றால் சம்பவத்தின்போது அவ்வாறு இல்லை, இப்போது வேண்டுமானால் அவ்வாறு இருக்கலாம். எதிரி பாண்டி 2017 ம் ஆண்டிலிருந்து நரம்பு சம்மந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு தற்போது வரை அவ்வாறு இருக்கிறார் என்றால் நான் பார்க்கவில்லை. நாங்கள் ஆளுக்கொரு திசையில் ஓடினோம் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

10. மானாமதுரை - தஞ்சாவூர் ரோடு தென்வடல் ரோடா கிழமேல் ரோடா என்றால் தென்வடல் ரோடு. அந்த ரோட்டுக்கு மேற்கு பக்கமும் கிழக்கு பக்கமும் காடுகள் உள்ளது என்றால் சரிதான். உருளி விலக்கிலிருந்து வேலூார் விலக்கிற்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 2 கி.மீ இருக்கும். வேலூார் விலக்கிலிருந்து ரோடு வளைவாக மானாமரை செல்லும் என்றால் சரிதான்.

11. முதல் விசாரணையில்சொன்னது போல் இந்த எதிரிகளால் அ.சா.2, 3 மற்றும் எனக்கும் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன ஆயுதங்களால் காயங்கள் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான், அ.சா.2 மற்றும் அ.சா3 ஆகிய மூவரும் புல்லட் இருசக்கரவாகனத்தில் சென்று கீழே விழுந்து ரோட்டில் கிடந்த கூர்மையான கற்களால் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.15 05:16:48 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**